பத்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 20 வியாழக்கிழமை (05-09-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 275

# அரசின் ராணுவ நடவடிக்கை பிரச்சினைக்கு தீர்வை தராது!

## பிரபா பேட்டி



லண்டன், செப். 5

" இராணுவ நடவடிக்கைகள் மூலம் தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்ற பாடத்தை விடுதலைப் புலிகளின் வளர்ச்சி அரசுக்குப் புகட்டியிருக்கிறது "

— இவ்வாறு கூறினார் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன். லண்டன் பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படிச் சொன்னார்.

யாழ்ப்பாணம் வந்திருந்த பி. பி. ஸியின் செய்தியாளர் அவரைப் பேட்டி கண்டார். நேற்றிரவு ஒலிபரப்பான அந்தப் பேட்டியின் விபரம் வருமாறு:-

## கிழக்கில் இருந்து புலிகளை விரட்டி விட்டதாகக் சொல்வது தவறு

கிழக்கு மாகாண நிலைமை குறித்து திரு. பிரபாகரன் முதலில் விளக்கினார்.

கிழக்கில் ராணுவ நிலைமை சிக்கலானது. பெரும்பான்மைத் தமிழர்களும் மற்றும் சிங்கள, முஸ்லிம் மக்களும் இங்கு வசிக்கிறார்கள்.

திருமலையிலும், அம்பாறையிலும் பல சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இவற்றைப் பாதுகாக்க பெரும் எண்ணிக்கையில் இராணுவமும், பொலீஸாரும் குவிக்கப் பட்டிருக்கின்றன.

கிழக்கின் கடலோரத்தில் பல இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

அப்படியிருந்தும் கிழக்கு மாகாணம் அரசின் கட்டுப் பாட்டில் இருப்பதாகக் கூற முடியாது.

கிழக்கில் எமது இராணுவ நடவடிக்கைகள் தொடர்கின்றன. எமது போராளிகள் எல்லா இடங்களிலும் நடமாடித் திரிகிறார்கள். கிராமப் புறங்களும் காட்டுப் பகுதிகளும் எமது கட்டுப்பாட்டில் இருக்கின்றன.

எனவே கிழக்கிலிருந்து புலிகளை விரட்டி விட்டோம் என்று அரசு கூறுவது முற்றிலும் தவறு.

## ஆனையிறவில் வெற்றி என்று அரசு கூறுவது சிறுபிள்ளைத்தனம்

கேள்வி:- ஆனையிறவு தமக்குப் பெரு வெற்றி என்று இராணுவம் கூறுகிறதே. போர் உத்தியில் நீங்கள் பிழையான வழியைக் கையாண்டுவிட்டதாகக் கருதுகிறீர்களா?

பிரபா:- ஆனையிறவுப் போர் ஒரு பெரிய வெற்றி என சிங்கள அரசு கூறுவது வெறும் பொய்ப் பிரசாரம். எமது வெற்றிகரமான தாக்குதல்களினால் ஆனையிறவுத் தளம் வீழ்ச்சியடையும் நிலையில் இருந்தது. எண்ணூறு இராணுவச் சிப்பாய்கள் எமது முற்றுகைப் போரில் சிக்கிக் கொண்டனர். இவர்களை மீட்பதற்காக — 8 ஆயிரம் பேர் கொண்ட பெரிய தாக்குதலை நடத்த — சிங்கள அரசு நிர்ப்பந்திக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலில் சிங்கள அரசுக்கு என்றுமில்லாத பெரிய இழப்புகள் ஏற்பட்டன. 5 மைல் தூரம் படைகளை நகர்த்த 24 நாட்கள் சென்றன.

இதனை வெற்றி என எக்காளமிடுவது சிறுபிள்ளைத் தனமானது.

ஒரு பெரிய மரபு வழிப் போரை நேருக்கு நேர் எதிர் கொள்ளும் பெரும் வளர்ச்சியை புலிகள் இயக்கம் அடைந்திருக்கிறது. ஆனையிறவுப் போர் இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

## சிங்கள அரசுக்கு ஒரு பாடம்!

கேள்வி:- புலிப்படையை மரபுவழி இராணுவமாக விரிவுபடுத்த நீங்கள் எடுத்து வரும் முயற்சிகள் என்ன?

பிரபா:- சிங்கள இராணுவத்துக்கு எதிரான எமது ஆயுதப் போராட்டம் 15 ஆண்டுகளுக்கு மேலான நீண்ட வரலாற்றைக் கொண்டது.

இந்த நீண்ட வரலாற்றுப் போக்கில் நாம் படிப்படியாக பெரும் வளர்ச்சியை அடைந்திருக்கிறோம்.

நீண்ட காலமாக கொரில்லாப் போர் முறையைக் கையாண்டு வந்த நாம், இப்போது மரபுவழி இராணுவமாக மாறி வருகின்றோம்.

இராணுவ ரீதியில் இது ஒரு பெரிய வளர்ச்சியைக் குறிக்கிறது. இந்த வளர்ச்சி எமது விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சிதான். இந்த வளர்ச்சி எமது போராட்டத்தின் பெரும் திருப்புமுனையாகவும் அமைகிறது.

இந்த வளர்ச்சியின் மூலம் சிங்கள அரசு ஒரு பாடத்தைக் கற்றுக்கொண்டது.

இராணுவ நடவடிக்கை மூலம் தமிழ் மக்களின் தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்ற பாடமே அது.

கேள்வி:- உங்களின் படையின் அளவு விரிவுபட்டுக் கொண்டு வரும் வேளையில் நீங்கள் சிறுவர்களையும், சிறுமிகளையும் புலிப்படையில் சேர்த்துக் கொள்வதாக கண்டனங்கள், குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இவ்வளவு இளம் வயதில் ஆட்களை ஏன் சேர்த்துக் கொள்கிறீர்கள்? இப்படிச் சேர்த்துக் கொள்ளப்படுவோர் எத்தனை வயதில் உங்கள் படையில் சேர்கிறார்கள்? அதாவது எண்ணைத்து அனுப்பப்

(3 ஆம் பக்கம் பார்க்க)

### மன்னாரில் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், செப். 5

மன்னார் மாவட்டத்தில் 11 ஆம் கட்டை, பொற்கேணி ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் அவ்ரோ விமானம் ஒன்று குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தியது.

11 ஆம் கட்டைப் பகுதியில் 4 குண்டுகளும், பொற்கேணிப் பகுதியில் 5 குண்டுகளும் வீசப் பட்டன. [ஓ]

### ஆனையிறவில் சிப்பாய் பலி

யாழ்ப்பாணம், செப். 5

ஆனையிறவில் நேற்று முன் தினம் பிற்பகல் 3 மணியளவில் நடந்த மோதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்.

படையினர் தமது பாதுகாப்புக்காக பதுங்கு குழி ஒன்றை அமைக்க முயன்ற சமயமே விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

சுமார் ஒரு மணி நேரம் நடந்த சண்டையின் பின்னர் படையினர் பின்வாங்கிச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, ஆனையிறவுப் படையினர் திடீர், திடீரென குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். [ஓ]

### இரு பொலிஸார் மரணம்

கொழும்பு, செப். 5

கிழக்கு மாகாணம் அக்கரைப்பற்றுப் பகுதியில் காணப்பட்ட தமிழர் ஒருவரின் சடலத்தை அகற்றச் சென்ற பொலீஸாரில் இருவர், அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்று வெடித்ததில் உயிரிழந்தனர் என்றும்—

வேறு இரண்டு பொலீஸார் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்படுகிறது. [ஒ-எ]

### தேரர்களை கண்டித்து சுவரொட்டிகள்

மல்வத்தை, அஸ்கிரிய மற்றும் பௌத்த பீடங்களைச் சேர்ந்த மகாநாயக்க தேரர்களை அவமதிக்கும் சுவரொட்டிகள் தெஹிவளை — கல்கிசை மாநகரசபைப் பகுதிகளில் ஒட்டப்பட்டிருந்தன.

ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு ஆதரவளிப்பதற்காக மகாநாயக்க தேரர்களை கண்டிக்கும் வாசகங்கள் அச் சுவரொட்டிகளில் காணப்பட்டன.

இதுகுறித்து தெஹிவளை— கல்கிசை மாநகரசபை மேயர் பொலீஸில் முறைப்பாடு செய்திருக்கிறார். (ஒ-எ)

### அடாவடித்தனம்

மட்டக்களப்புப் பகுதியில் இராணுவமும், சமூக விரோதக் கும்பல்களும் தமிழ்மக்கள் மீது தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றன.

இதனால் தமிழ் மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர். சிலர் வீடுகளை விட்டு வெளியேறி காடுகளில் வசிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

சில இடங்களில் தமிழர்களின் வீடுகளில் சிங்களவர்கள் குடியமர்த்தப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [ஓ]

## மணலாறுப் பகுதியில் கடும் சண்டை தொடர்கிறது

### 12 சிப்பாய்கள் உயிரிழப்பு

மணலாறு மாவட்டத்தில் நேற்று நான்காவது நாளாக பெரும் மோதல்கள் இடம் பெற்றன.

பயங்கர விமானக் குண்டு வீச்சுக்களின் மத்தியிலும் விடுதலைப் புலிகள் சளைக்காமல் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகின்றனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நித்தியக்குளம் காட்டுப் பகுதியிலும் விடுதலைப் புலிகள் தீரத்துடன் சண்டையிட்டு வருகின்றனர். இங்கு படையினருக்கு பெரும் இழப்புகள் ஏற்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

இதேவேளை—

மணலாறுப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் அரசுப் படையினருக்கும் இடையே நடந்த மோதல்களில் இது வரை 12 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர் என்று நேற்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## தகவல் ஏதும் வெளியிடாதீர்! தளபதிகளுக்கு அரசுபணிப்பு

கொழும்பு, செப். 5

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது விமானப் படையினரின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கை குறித்து தகவல் ஏதும் வெளியிடவேண்டாம் என்று இராணுவத் தளபதிகளுக்கு அரசு உத்தரவிட்டுள்ளது.

இதனை கொழும்பில் உள்ள இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என்று செய்தி ஏஜென்சிகள் தகவல் வெளியிட்டன.

முல்லைத்தீவு காடுகள் விடுதலைப் புலிகளுக்குச் சாதகமான இடங்கள் என்றபடியால், அரசுப்படையினர் விடுதலைப் புலிகளிடமிருந்து கடும் எதிர்ப்பை எதிர் நோக்கி வருவதாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன. (ஒ-எ)

## பிரேமா தலைமையில் சர்வகட்சி மாநாடு

கொழும்பு, செப். 5

ஜனாதிபதி பிரேமதாஸா தலைமையில் நேற்று முன் தினம் கொழும்பில் சர்வ கட்சி மாநாடு நடைபெற்றது.

மாநாட்டில் தமிழ், முஸ்லிம் கட்சிகள் உட்பட 17 அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பங்குபற்றினர். அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீதும் மாநாட்டில் கலந்து கொண்டார்.

அரசியலமைப்பின் 17 ஆவது திருத்தம் குறித்து அங்கு விரிவாக ஆராயப்பட்டது.

எந்தெந்தக் கட்சிகள் மாநாட்டில் கலந்து கொண்டன என்பது குறித்து விவரமாக அறிவிக்கப்படவில்லை.

## ஜே.ஆர். சம்பந்தம் இல்லை என்கிறார் அத்துலத் முதலி

கொழும்பு, செப். 5

ஜனாதிபதி பிரேமதாசாவைப் பதவி நீக்கம் செய்யும் முயற்சியில் முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா சம்பந்தப்படவில்லை.

இத்தகவலை முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலி வெளியிட்டார்.

திரு. ஜெயவர்த்தனாவுடன் தான் தொடர்பு கொண்டிருந்தாலும் அவருக்கு இவ் விஷயத்தில் எதுவித சம்பந்தமும் கிடையாது என்றும் திரு. அத்துலத் முதலி கூறினார். (இ-எ)

## நீலகிரிக் காடுகளில் புலிகளைத் தேடி வேட்டை!

சென்னை, செப். 5

தமிழ்நாட்டில் உள்ள நீலகிரி காடுகளில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளைத் தேடி பொலீஸார் பெரும் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாக சென்னைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறீமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்தியா திரும்

(3 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

ஆண்களுக்குரிய ஆடைகளைநன்கு வெட்டித் தைக்கக்கூடியவர்கள் உடன் தேவை. நல்ல சம்பளம் கொடுக்கப்படும். தொடர்பு இல. 349 மே/பா உதயன் யாழ்ப்பாணம்.

(17693)

### இடமாற்றம்

வேலணையிலும், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியிலும் இயங்கி வந்த நடன முருகன் வைத்திய நிலையம் தற்காலிகமாக ஆஸ்பத்திரி வீதி [76] 222 ஆம் இலக்கக் கட்டடத்தில் [சத்திரச் சந்திக்கருகாமையில்] இடமாற்றப்பட்டுள்ளது. வைத்தியர்:- கந்தையா நவரத்தினம்.

(17684)

### APPLIED MATHEMATICS

G.C.E. A/L மாணவர்களுக்குரியவை. வேக - நேர வளையி, சார்பு வேகம், தொடர்பு ஆர்முடுகல்: ஆப்பு, எறியம், நீர்நிலையியல் ஆகிய பகுதிகள் அடங்கியவை. ஆக்கியோர்: P.வேலாயுதம் B Sc. [லெக்டர்], S. பிரேம்நாத் B.Sc கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

(சி-0434)

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவாகம் நடைபெறுமா? வெளிநாடு போகலாமா? உங்கள் பிரச்சினை எதுவானாலும் உரிய பதில் தரப்படும். ஜாதகம், குறிப்பு எழுதவும். எண் சோதிடம்,, கைரேகை பார்க்கவும், விவாகப்பொருத்தம், வீட்டுக்கு நிலையம் வகுக்கவும் தொடர்பு டாக்டர் த சிவானந்தன். பிரபல சோதிடர், ஆனந்தா சோதிட நிலையம், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு.

(17992)

### பாடப் புத்தகம்

O/L, A/L மாணவர்கள் இலகுவில் ஆங்கிலம் கற்க, கற்பிக்க ஒருநூலாக 'ஈசி இங்கிலிஷ்' (Easy English) வெளிவந்துள்ளது. 1 ஆம், 5ஆம் பகுதிகள் தமிழ்மொழி பெயர்ப்புடன் புத்தக நிலையங்களில் விற்பனைக்குண்டு

(17999)

### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தார் நோவு எண்ணெய் எஸ். ரி மெடிகல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

(4241)

## தமிழ் நூல்கள் தேவை

சுன்னாகத்திலுள்ள கிறிஸ்தவ இறையியல் கல்லூரி மாணவரின் பாவிப்பிற்காக தமிழ் இலக்கிய நூல்கள் தேவைப்படுகின்றன. நல்ல நிலையிலுள்ள நூல்கள் விலை கொடுத்து வாங்கப்படும். இவற்றை வைத்திருப்போர் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

கல்லூரி முதல்வர்,
கிறிஸ்தவ இறையியல் கல்லூரி,
சுன்னாகம். (18016)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**கந்தப்பு இரட்ணசாமி**

[ஓய்வு பெற்ற கமத்தொழிற்சேவை பெரும்பாக உத்தியோகத்தர்.]

தோற்றம்: 24 - 05 - 1921 மறைவு: 06 - 08 1991

உங்கள் ஆத்ம சாந்திபெற என்றும்பிரார்த்திக்கும்:

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சரணவாய் தெற்கு,
சரவெட்டி. (18019)

## கலை, வர்த்தகக் கல்லூரி
### (பட்டப் படிப்புகள் பிரிவு)
### யாழ். பல்கலைக்கழக வெளிவாரி
## பட்டப்படிப்புகள் 91/92

(I) வணிக முதற் தேர்வு- First in Com.
(II) கலைத் தேர்வு- G. A. Q.

மேற்படி பட்டப் படிப்புகளுக்கான விரிவுரைகள் 14 - 09 - 1991 மு. ப. 8 - 00 மணிக்கு ஆரம்பமாகும்.

கணக்கியல் - ஶ்ரீ B. Com [Hons]

குறிப்பு: [I] முழுப்பாடத்திட்டமும் முடிக்கப்படும்.
[II] அச்சடித்த பாடக் குறிப்புகள் வழங்கப்படும்.
[III] விரிவுரைகளில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் தமது பெயர்களை முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளவும்.

பட்டப்படிப்புகள் பிரிவு,
**கலை, வர்த்தகக் கல்லூரி,**
(C. C. A.)
வெலிங்டன் சந்திக்கு அருகாமை,
யாழ்ப்பாணம்.
(சி/0423)

## அரசாங்க எழுதுனர் சேவை

### போட்டிப் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புகள்

பாடங்கள்.
(1) மொழி தேர்ச்சி,
(2) பொது உளச்சார்பு

தகைமைகள்:
(a) G.C E. O/L அல்லது N G.C.E. பரீட்சையில் சித்தி (தமிழ், கணிதம் உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்தி.
(b) வயதெல்லை 18 - 40

**விண்ணப்ப முடிவுத் திகதி: 30 09 - 1991**

விண்ணப்பப் பத்திரத்தையும், விவரக்கொத்தையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

**ஆரம்பம்: 08 - 09 - 1991 1 30 மணி**

முழுக் கட்டணம்: 275/-

SCHOOL OF BUSINESS ADMINISTRATION
16, 3rd CROSS STREET,
O L R. தேவாலய மேற்குப் பக்கம்],
JAFFNA. [சி-0468]

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

இறைவனின் படைப்பில்:
5 - 05 - 1931

இறைவனின் அணைப்பில்:
27 - 08 1989



**ஶ்ரீமான்
கிருஷ்ணசாமி ஆனந்தசுந்தரம்**

[ஓய்வுபெற்ற D. O. A. கட்டடத் திணைக்களம் யாழ்ப்பாண ]

அன்புத் தெய்வமே! பண்பிற்கோர் இலக்கணமாய், பாசத்திற்கோர் உறைவிடமாய், குடும்பத்தின் ஒளிவிளக்காய், உலகிற்கோர் உத்தமராய், வீட்டிற்கோர் வித்தகனாய் திகழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து இரண்டு ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் உள்ளங்களில் அணையாத தீபமாய் என்றும் ஒளிரும்.

தங்களின் ஆத்மா சாந்தியடைய அனுதினமும் ஆண்டவனைப் பிரார்த்திக்கும்;

மனைவி, மக்கள்.
மற்றும் குடும்பத்தினர்.

கருவேலவடி லேன்,
கொக்குவில் கிழக்கு. [18022]

## கிறிஸ்தவ இறையியல் கல்லூரி
### சுன்னாகம்

கிறிஸ்தவ இறையியல் பட்டதாரி 'டிப்ளோமா' வகுப்புகளில் சேர்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன,

குறைந்த பட்சம் G. C. E. [O/L] பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தி அடைந்தவர்கள் இப் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம். குறிப்பாக, G C. E. [A/L] பரீட்சையில் 'கிறிஸ்தவம்' ஒரு பாடமாக எடுத்து சித்தியடைந்தவர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படும்.

இறையியல் கல்லூரியின் விண்ணப்பப் பத்திரத்திலேயே உங்கள் விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும். இப் பத்திரங்களையும், மற்றும் விவரங்களையும் கல்லூரி அலுவலகத்தில் கேட்டுப் பெற்றுக்கொள்ளவும்.

விண்ணப்பம் இவ் அலுவலகத்தில் செப்டெம்பர் 29 ஆம் திகதிக்கு முன்பதாக சேர வேண்டும்.

- பதிவாளர்.

இறையியல் கல்லூரி, சுன்னாகம். [18015]

யாழ். மாவட்ட மக்களுக்கு!

## ஓர் அரிய சந்தர்ப்பம்!

### இலங்கை அரசாங்க எழுதுனர் சேவை

யாழ். மாவட்டத்திலுள்ள 500 க்கும் மேற்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கான

## போட்டிப் பரீட்சை

விரைவில் நடைபெறவிருக்கும் இப்பரீட்சைக்கான 2 மாத

விசேட பயிற்சி வகுப்புகள்

**ஆரம்பம்; 07 - 09 - 91** மு ப. 10 மணி

பாடநெறி;
1. மொழித் தேர்ச்சி 2. பொதுஉளச் சார்பு

தகைமைகள்:
18—40 வயதிற்கிடைப்பட்ட G. C. E. O/L அல்லது N. C. G. E. பரீட்சையில் 6 பாடங்களில் கணிதம், தமிழ் உட்பட 4பாடங்களில் திறமைச்சித்தி (C) (B)

**விண்ணப்ப முடிவு திகதி: 30 - 09 - 91**

விண்ணப்பப் படிவங்களையும், விவரத்திரட்டினையும் எம்மிடம் நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

★ விரிவுரைகள் சனி, ஞாயிறு தினங்களிலும், விடுமுறை நாட்களிலும்.
★ அச்சடித்த பாடக் குறிப்புகள்.
★ கட்டணம் ரூபா 290/- (முழுப்பயிற்சிக்கும்)

*ASTAN INSTITUTE*
101/10 STANLEY ROAD — JAFFNA.
[மக்கள் வங்கிக்கு அருகாமையில்)
(சி-0440)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு:
28 — 05 - 1953



உதிர்வு:
06 — 07 — 1991

அமரர்
**வீரகத்தி செல்வகுலசிங்கம்**
**(செல்வம்)**

அன்னாரின் மரணச்சடங்கில் பங்குபற்றியோருக்கும், அனுதாபம் தெரிவித்தோருக்கும், உதவி புரிந்தோருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். 05 - 08 - 1991 வியாழக்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக்கிரியையில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கிறோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்:

மனைவி, பிள்ளைகள்.

கச்சார் வெளி, பளை. [17689]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### மணலாறில் சதி வேலை

தெற்கில் பெரும் அரசியல் போர் நடந்துகொண்டிருக்கிறது. அரசியல்வாதிகள் அந்தப் போரில் முழுக் கவனத்தையும் செலுத்திக் கொண்டிருக்க, இராணுவத்தினர் தமிழ்ப் பகுதிகளில் தமது இராணுவ நடவடிக்கைகளை முடுக்கிவிட்டிருக்கின்றனர்!

மணலாறுப் பிரதேசத்தில் மிகப் பெரும் எடுப்பில் இராணுவ நடவடிக்கைகள் இம்மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளன. காட்டுப் பிரதேசத்தில் மட்டுமன்றி மக்கள் வாழும் பகுதிகளான அலம்பில், செம்மலை, கொக்கிளாய், நாயாறு, குமுழமுனை ஆகிய பகுதிகளிலும் கடும் மும்முனைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. கடந்த நான்கு நாட்களில் பொதுமக்கள் பலர் பலியாகியுள்ளனர். பாடசாலைகள், தேவாலயங்கள், வீடுகள் உட்பட பல உடைமைகள் நாசமாகியுள்ளன.

இது எதனைக் காட்டுகிறது? தெற்கில் என்ன பிரச்சினை, குழப்பம், உட்பூசல் நடந்தாலும் தமிழர்களை இன அழிப்புச் செய்வது ஓயாது. அரியணையில் யார் இருந்தாலும், தமிழர்களை அழித்தொழிப்பது நிறுத்தப்படமாட்டாது. கொழும்பில் எவர் கை ஓங்கினாலும் சரி, வடக்கு-கிழக்கில் தமிழர்களை அடிமைகளாக அடக்கி ஒடுக்க வேண்டும் என்பதில் மாற்றம் உண்டாகாது. - இவற்றையே இவ்வேளை நடக்கும் இராணுவ நடவடிக்கை மிகத் துலாம்பரமாக எடுத்து விளக்குகிறது!

கொழும்பில் தலைமை அதிகாரம் யார் கைக்கு மாறினாலும் சரி, இராணுவத்தை எவரும் எவ்விதத்திலும் கட்டுப்படுத்த முடியாத நிலை உருவாகி இருக்கிறது. இராணுவம் அதிகாரத்தை தன் கைக்கு எடுத்துள்ளது என்பதே உண்மை நிலை.

அலம்பில், செம்மலை, கொக்கிளாய், நாயாறு, குமுழமுனை ஆகிய இடங்களில் இராணுவத்தினர் இராணுவ நடவடிக்கைகளை முடுக்கிவிட்டிருப்பதற்கு விசேட காரணமும் ஒன்று உண்டு.

இப்பகுதிகளில் வாழும் மக்கள், 1985 ஆம் ஆண்டில் இருந்து, அகதிகளாக வெளியேறுவதும் பின்னர் மீளக் குடியமர்வதும் மீண்டும் அகதிகளாக அலைவதுமாக இருக்கிறார்கள். இப்பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை நடத்தும் நோக்குடன் அரசும், இராணுவமும் கூட்டுச் சேர்ந்து இவ்வாறு அப்பகுதி மக்களைத் தொல்லைப்படுத்துகின்றன. நிம்மதியாக நிரந்தரமாக வாழ விடாமல் அடிக்கடி அந்தரிக்கச் செய்து அகதிகளாக்குகிறார்கள்.

இவ்வாறு தொல்லைப்படுத்தி அவர்களை வேறு இடங்களுக்கு நிரந்தரமாக இடம்பெயரச்செய்துவிட்டு, சிங்களக் குடியேற்றங்களை தாராளமாகவும், இலகுவாகவும் நிறைவேற்றுவதே கூட்டுத் திட்டத்தின் நோக்கம்.

அந்தத் திட்டம் நிறைவேறினால் வடக்குக்கும், கிழக்குக்கும் இடையில் உள்ள நிலப் பரப்புத் தொடர்பை துண்டித்து விடலாம் என்ற பெருமூளையுடன் - சதி நோக்குடன் - கருமங்கள் நடக்கின்றன.

ஆகவே வகுத்த திட்டத்தை செயற்படுத்த அரசுக்கு அறிவிக்கவேண்டும் என்ற அவசியம் கூடப் படைகளுக்கு இல்லை. தாம் நினைத்த மாதிரி எதனையும் எப்படியும் செய்யலாம் என்பதேயாம்!

## புலிகள் இயக்கத்தை இந்தியாவில் தடை செய்க!

### வாழப்பாடி கோருகிறார்

சென்னை, செப். 5

இந்தியாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் அதன் நடவடிக்கைகளுக்கும் தடைவிதிக்கும்படி தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரும் எம். பியுமான வாழப்பாடி இராமமூர்த்தி புதுடில்லி அரசைக் கோரியுள்ளார்.

ராஜீவ் கொலையில் விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்டிருப்பது சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபணமகியுள்ளது.

விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரன் தான் இக்கொலைக்கு உத்தரவிட்டார் என்பதற்கு விசேட புலனாய்வுக் குழுவினரிடம் போதிய சான்றுகள் உள்ளன என்று வாழப்பாடி கூறினார்.

### சிவராசன், சுபா ஆகியோரின்

## தலை எக்ஸ்ரே எடுக்கப்பட்டு சடலங்கள் புதைக்கப்பட்டன

தலைப் பகுதிகள் எக்ஸ்ரே எடுக்கப்பட்டபின்பே சிவராசன் மற்றும் சுபா ஆகியோரின் உடல்கள் புதைக்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

அதேசமயம் சிவராசனுக்கு பெங்களூரில் புகலிடம் கொடுத்த வீட்டு உரிமையாளர் ரங்கநாத்தை எதிர்வரும் அக்டோபர் முதலாம் திகதி வரை காவலில் வைக்கும்படி ராஜீவ் கொலையை விசாரிக்க நியமிக்கப்பட்டுள்ள விசேட நீதிவான் உத்தரவிட்டிருக்கிறார். (இ-எ)

## சிவராசனின் கார்ச் சாரதி பொலீஸாருக்கு வாக்குமூலம்

சிவராசனின் கார்ச்சாரதி ரங்கன், ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக மத்திய புலனாய்வுப் பொலீஸாரிடம் வாக்குமூலம் ஒன்றை அளித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ரங்கனை பொலீஸார் சென்னை அடையாறு பகுதியில் வைத்துக் கைது செய்தனர்.

தற்போது பொலீஸ் காவலில் வைக்கப்பட்டுள்ள ரங்கன் மத்திய புலனாய்வுக் குழுவினருக்கு அளித்த வாக்குமூலம் ஒன்றில் ராஜீவ்காந்தியைக் கொலை செய்ய சிவராசன், சுபா மற்றும் தாணு ஆகியோருடன் தாமும் ஒரே படகில் தமிழ்நாடு வந்து சேர்ந்ததாகத் தெரிவித்தார் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-எ)

### மானிப்பாயில் இயங்கும்

## தெல்லிப்பளை ஆஸ்பத்திரி சில பிரிவுகள் மூடப்பட்டன

யாழ்ப்பாணம், செப். 5

மானிப்பாயில் இயங்கும் தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையின் சில பிரிவுகள் மூடப்பட்டு, வேறு வைத்தியசாலைகளுடன் இணைக்கப்படவிருக்கின்றன. இந்த நடைமுறை கடந்த முதலாம் திகதி முதல் அமுலுக்கு வந்துள்ளது.

பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

இந்த வைத்தியசாலையில் இயக்கும் மிசன் வைத்தியசாலைக்கு ஏற்பட்ட நஷ்டம் காரணமாக இந்த வைத்தியசாலையின் சில பிரிவுகளை மூட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்,

புதிய நடைமுறையின்படி மேற்கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடுகள் வருமாறு:

★ இங்கு இயங்கிய வெளிநோயாளர் பிரிவு, மகப்பேற்று நிலையம், வைத்திய நீரிழிவுக் கிளினிக்குகள் மூடப்படும்.

★ மனநோயாளர் பிரிவு, குழந்தை பராமரிப்பு பிரிவு, பற் சிகிச்சை நிலையம் ஆகியன தொடர்ந்து மானிப்பாயில் இயங்கும்.

★ சங்கானை வைத்திய சாலையில் வைத்திய சலரோக மற்றும் கிளினிக்குகள் நடைபெறும். அதற்காக மேலதிக வைத்திய அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

★ சங்கானை வைத்திய சாலையிலும், கொட்டைக்காடு, பண்டத்தரிப்பு, சங்கானை கிராமிய வைத்திய சாலைகளிலும் மகப் பேற்றுக்கு பிரத்தியேக வசதிகள் செய்யப்பட்டுள்ளன என்றார் அவர். [இ-10-30]

### பதவி ஏற்பு

யாழ்ப்பாணம், செப். 5

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலகத்துக்குப் பொறுப்பான அதிகாரியாக திரு. கிளாவ்டி ஜோவ் பதவி ஏற்றுள்ளார். [ஒ-3]

நல்லூர் உற்சவகாலச் சிறப்பம்சம்

வளர்க தமிழர் புகழ்!

முருகு தமிழில் எழில் முழுகு முகவடிவு
முழுதும் எழுதவரு முருகோனே!
பருகு முனதமுதக் கருணை நறவினிய
பாகில் எனையமுத்தப் பார்ப்போனே!
உருகு முனதடியவ் உணர்வில் உதித்தெழுந்து
உனக்கு தமிழ்க்குழக நல்லூரா!
வருக! தமிழீழம் மலர அருள் பொழிக!
வளர்க! தமிழர் புகழ் புவி மீதே!

முருகனடியான்.

## அரசின் ராணுவ...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

படுகிறார்கள்?

பிரபா:- நாம் பலவந்தமாக யாரையும் இராணுவத்தில் சேர்த்துக் கொள்வதில்லை.

அரச பயங்கரவாத ஒடுக்குமுறையினாலும் அதனால் எமது சமுதாயத்தில் ஏற்படும் தாக்கங்களினாலும் சிறுவர்கள் எமது இயக்கத்தில் சேர்ந்து கொள்கிறார்கள் என்பதுதான் உண்மை.

அதுமட்டுமல்லாது பல பெற்றோர்கள், பகிரங்கமாக எமது கூட்ட மேடைகளிலேயே தமது சிறு புதல்வர்களையும், புதல்விகளையும் எம்மிடம் ஒப்படைக்கிறார்கள்.

அப்படியிருந்தும் இச் சிறுவர்களுக்கு நாம் கல்வி வசதி செய்து கொடுக்கிறோம்; பல்வேறு துறைகளில் பயிற்றுவிக்கிறோம்; தொழில் அறிவை வளர்த்து விடுகிறோம்.

சிறுவயதானவர்களை நாம் போர்க்களத்துக்கு அனுப்புவதில்லை.

### இந்திய உறவில் பிரச்சினை

கேள்வி:- இந்தியாவுக்கும் உங்களுக்கும் உறவு இப்போது மோசமானதாக இருக்கிறது. இது உங்களுக்குக் கவலையைத் தருகிறதா?

பிரபா:- நீண்டகாலமாகவே இந்தியாவுக்கும் எமக்கும் உறவில் பிரச்சினை ஏற்பட்டு வந்திருக்கிறது.

1983 இல இந்திய அரசு எமது பிரச்சினையில் தலையிட்டது. ஆயுதப் பயிற்சி கொடுத்து பல குழுக்களை உருவாக்கியது.

பின்னர் 1987 இல் ஓர் ஒப்பந்தம் செய்து அதனை எமது மக்கள் மீது திணிக்க முயன்றது. அதற்கு நாம் எதிர்ப்புத் தெரிவித்ததும் எம் மீது ஒரு யுத்தத்தை ஏவிவிட்டது.

இப்படியாக இந்திய அரசு தனது சொந்த நலனைப் பேண முயன்றது.

நாம் எமது மக்களின் நலனை முதன்மைப்படுத்திய போது எமக்கும் இந்திய அரசுக்கும் இடையில் முரண்பாடும் பகைமையும் ஏற்பட்டன.

இந்த நீண்ட கசப்பான வரலாற்றின் தொடர்ச்சியாகவே எமது இயக்கத்திற்கு எதிராக இந்திய அரசு செயற்படுகிறது. இந்தியாவின் இந்த அணுகுமுறை எமக்கு கவலையையும், ஏமாற்றத்தையும் கொடுக்கத்தான் செய்கின்றன.

### மத்திய, மாநில அரசுகளின் திட்டம்

கேள்வி:- தமிழ்நாட்டில் புலிப் படைகளின் நடவடிக்கைகள் நசுக்கப்பட்டு வருவது பற்றி குறிப்பாக ஏதும் கூற முடியுமா? தமிழ்நாட்டில் எடுக்கப்படும் இந்த நடவடிக்கைகள் இலங்கையில் உங்கள் போராட்டத்தை எந்த வகையில் மிக மோசமாகப் பாதிக்கிறது?

பிரபா:- நீண்டகாலமாகவே தமிழ்நாட்டில் புலிகளைப் பகடைக்காய்களாக வைத்தே அரசியல் சதுரங்க ஆட்டம் நடைபெற்று வருகிறது.

தமிழ்நாட்டு மக்களை எமது இயக்கத்திற்கு எதிராகவும், எமது சுதந்திரத்திற்கு எதிராகவும் திருப்பி விட இந்திய மத்திய அரசும், தமிழக அரசும் திட்டமிட்டுச் செயற்படுகின்றன.

எமது இயக்கத்துக்கு அவதூறு ஏற்படுத்த திட்டமிட்ட முறையில் விஷமப் பிரசாரங்கள் நடைபெறுகின்றன. எனினும் தமிழ்நாட்டில் பரந்துபட்ட மக்கள் எமது இயக்கத்துக்கும், எமது போராட்டத்துக்கும் ஆதரவாகவே இருக்கின்றார்கள். இந்த ஆதரவு இருக்கும் வரை எமது போராட்டத்துக்கு பாதிப்பு ஏதும் இல்லை.

### பிரிட்டனின் நடவடிக்கை ஏமாற்றம் தருகிறது

கேள்வி:- ராஜீவ் காந்தி படுகொலைக்கும் புலிகளுக்கும் எவ்வித தொடர்புமில்லை என்று நீங்கள் கூறி வருவது எமக்குத் தெரியும். என்றாலும் இந்தியப் புலனாய்வுக் குழுவினர் நீங்கள் தான் இதற்குப் பொறுப்பு என திடமாக நம்புவது போல் தெரிகிறது. இன்னொரு திருப்பமாக லண்டனில் உள்ள உங்கள் பிரதிநிதி திரு. கிட்டு லண்டனிலிருந்து பிரிட்டிஷ் அரசினால் வெளியேற்றப்பட்டிருக்கிறார். அனைத்துலக அரங்கில் உணர்வலைகள், கருத்துக்கள் என்பன உங்களுக்கு எதிராக மாறுகின்றன எனக் கவலைப்படுகிறீர்களா?

பிரபா:- ராஜீவ் கொலைக்கும் எமது இயக்கத்துக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை.

இந்தக் குற்றச்சாட்டு இன்னமும் நிரூபிக்கப்படவில்லை. இக்கொலைக் குற்றச்சாட்டை எம்மீது சுமத்தி சர்வதேச ரீதியில் எமது இயக்கத்தைக் களங்கப்படுத்த இந்திய அரசு முயல்கிறது.

கிட்டுவின் விடயத்தில் பிரிட்டன் அரசு நடந்து கொண்ட விதம் எமது மக்களுக்குப் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறது.

வைத்திய சிகிச்சைக்காக அவர் லண்டன் செல்ல பிரித்தானிய தூதரகமே அனுமதி வழங்கியது.

கிட்டு ஓர் அங்கவீனர். ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் பிரதிநிதி என்று தெரிந்தும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது மிகவும் பொறுப்பற்றதும் மனிதாபிமானமற்றதுமான செயலாகும்.

### பிரமாண்டமான அரசியல் அமைப்பு

கேள்வி:- தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் அரசியல் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டும்கூட, புலிப் படையினர் முக்கியமாக ஓர் ஈவு இரக்கமற்ற இராணுவ அமைப்பு என்று இலங்கையில் உங்களை எதிர்த்துக் குரல் எழுப்புபவர்கள் கூறுகின்றனர். உங்கள் இயக்கத்தின் அரசியல் பங்கு, பணி என்ன?

பிரபா:- அப்படிச் சொல்வது முற்றிலும் தவறு. நாம் ஓர் பிரமாண்டமான அரசியல் அமைப்பைக் கட்டி எழுப்பியுள்ளோம். எமது மக்களிடையே சிவில் நிர்வாகம், உணவு உற்பத்தி நிவாரணம், சமூக சேவை, அகதிகள் சேவை போன்ற விடயங்களை எமது அரசியல் பிரிவே அமைத்து வருகிறது.

எமது பகுதிகளில் உள்ள மக்களின் அன்றாட வாழ்வில் எங்களுடைய இயக்கம் பெருமளவு பங்கு வகித்து வருகின்றது என்பது தான் உண்மை. — என்றார்.

## நீலகிரி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பிய இந்திய வம்சாவளியினர் நீலகிரி தேயிலைத் தோட்டப் பகுதிகளில் குடியமர்த்தப்பட்டனர்.

அப்பகுதிகளில் விடுதலைப் புலிகள் இயக்கப்போராளிகள் தங்கி இருக்கலாம் என்ற சந்தேகத்தில் இத்தேடுதல் நடத்தப்படுவதாகவும் —

இதன் காரணமாக மறுவாழ்வளிக்கப்பட்டுள்ள இந்திய வம்சாவளியினர் பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்ளப்படுவார்கள் என்றும் அப்பகுதி பொலீஸ் ஆணையாளர் கணேசன் தெரிவித்தார். (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமான

பவுண் பீடி

மொத்தமாகப் பெற்றுக்கொள்ள

புஷ்பா அன் கொம்பனி

293, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

(C 0472)

## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், விவசாயபீடம், கிளிநொச்சி

பின்வரும் பதவிகளுக்கு 1991-09-27ஆம் திகதி வரை பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

1. தற்காலிக ஆங்கிலப் போதனாசிரியர்
2. தற்காலிக உதவி விரிவுரையாளர்/தற்காலிக செய்முறை காட்டுநர் பயிராக்கவியல் / விவசாய இரசாயனவியல் / விவசாயப் பொருளியல் / விவசாய உயிரியல் / மிருக விஞ்ஞானம் / விவசாயப் பொறியியல்.

03. தற்காலிக உதவி விரிவுரையாளர் கணிதம்

**சம்பள அளவுத் திட்டம்:**

1. தற்காலிக ஆங்கிலப் போதனாசிரியர்: 3,000/- ரூபா (நிலையானது) மாதமொன்றுக்கு.
2. தற்காலிக உதவி விரிவுரையாளர்: 3,900/- ரூபா (நிலையானது) மாதமொன்றுக்கு.
3. தற்காலிக செய்முறை காட்டுநர்: 3,250/- ரூபா (நிலையானது) மாதமொன்றுக்கு.

விண்ணப்பங்கள் இப்பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (தாபனங்கள்) அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய படிவங்களில் செய்யப்படுதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களுக்கான வேண்டுகோளுடன் 23x10 ச. மீற்றர் அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப்பட்ட கடித உறை அனுப்பப்படல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளில் உள்ள விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

— பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1991-09-01. [சி-0464]

## காணவில்லை



படத்தில் காணப்படுபவரான

**இராசதுரை கனகேஸ்வரி**

என்ற 33 வயதான இரு பிள்ளைகளின் தாயாரை 28-08-91 முதல் காணவில்லை. 5 அடி 4 அங்குல உயரம், பொது நிறம், புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர், கிளிநொச்சி செல்வா நகரில் வசித்து வந்தவர். இவரைக் கண்டவர்கள் அல்லது தகவல் அறிந்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

பரீஸ் ரெக்ஸ்ரையில், மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் அல்லது சி. த. சின்னத்தம்பி, புங்குடுதீவு-2. தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(18024)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேட் லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 5-09-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## உற்சவ கால நிகழ்ச்சிகள்

நல்லூர் உற்சவகாலத்தையொட்டி நடைபெற்றுவரும் இசை மற்றும் சமய அரங்குகளில் தெண்டாயுதபாணி உற்சவ தினமான இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ள நிகழ்ச்சிகள் வருமாறு:-

★ நாவலர் மணி மண்டபத்தில் — சங்கீத வித்துவான் செல்வி ராதிகா சுப்பிரமணிய ஐயரின் இசைக் கச்சேரி.

★ கம்பன் கோட்டத்தில் — திரு. என். கே. பத்மநாதன், வீ. கே. பஞ்சமூர்த்தி குழுவினரின் நாதஸ்வர இசை.

★ நல்லூர் ஆதீன குருமூர்த்தி ஆலயத்தில் — திரு. ந. சிவசண்முகமூர்த்தி நிகழ்த்தும் ''கந்தரனுபூதி'' கதாப்பிரசங்கம்.

★ மேற்கு வீதி பிள்ளையார் கோவிலில் — கானகதாவாரிதி வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்தும் இராமயணத் தொடர் விரிவுரையில் ''இன்றுபோய் நாளைவா''.

★ நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீனத்தில் — பிற்பகல் 2 மணிக்கு திரு. சண்முகவடிவேல் நிகழ்த்தும் திருமுருகாற்றுப்படை சொற்பொழிவு. [இ-126-30 5]

## கலந்துரையாடல்

யாழ். ப. நோ. கூ. சங்கக் கிளைகளுக்கு பாதுகாப்பு வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று வியாழன் பிற்பகல் 3 மணிக்கு சங்கத் தலைமையகத்தில் நடைபெறவிருக்கிறது.

சங்கக் கிளைகளில் அடிக்கடி இடம்பெறும் திருட்டுக்களைத் தடுக்கும் வகையில் அவற்றுக்கு பாதுகாப்பு வழங்குவது தொடர்பாக அங்கு விரிவாக ஆராயப்படவிருப்பதாக சங்கத் தலைவர் திரு. எஸ். சிறில் தெரிவித்தார். [ஒ-3]

## வீரமரணம்

யாழ்ப்பாணம், செப். 5

மணலாறு மாவட்டத்தில் நேற்று முன்தினம் [செவ்வாய்] நடந்த மோதலில் ஜேம்ஸ் [மட்டுநகர்] என்ற போராளியும், திங்களன்று இடம்பெற்ற சண்டையில் சுமித்ரா தி[தர்சினி நடராசா-கிளிநொச்சி] என்பவரும் வீரமரணமடைந்தனர். [ஒ]

## ஆய்வுப் பட்டறை

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஒழுங்கு செய்துள்ள ''வன்செயல்களின் பாதிப்புக்களை மதிப்பீடு செய்தலும், அவற்றிற்கான புனர்வாழ்வு நடவடிக்கைகளை இனங்காணுதலுக்கு'' மான ஆய்வுப் பட்டறை நாளை வெள்ளிக்கிழமையும், அதற்கு மறுநாளும் காலை 9-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை தமிழர் புனர்வாழ்வுக் கழக கலந்துரையாடல் மண்டபத்தில் நடைபெறும்.

ஆய்வுப் பட்டறையில் நாளைய தினம் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைவர் திரு. கோ. மகேந்திரராசா, யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா, பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோர் சிறப்புரை ஆற்றவுள்ளனர்.

## அநாதரவாக பச்சிளம் சிசு

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்குச் சமீபமாக நேற்றுக் காலை பச்சிளம் பெண் குழந்தை ஒன்று அநாதரவான நிலையில் காணப்பட்டது. பிறந்த ஒரு நாளிலேயே இது கைவிடப்பட்டிருந்ததாகத் தெரிய வருகிறது.

அப்பகுதி கிராம சேவையாளரின் ஏற்பாட்டில் விடுதலைப் புலிகளின் அனுசரணையுடன், மூளாய் வாசி ஒருவர் குழந்தையைத் தத்தெடுத்துக் கொண்டார். [ஒ-23]

## தாண்டிக்குளம் பகுதியில் பெண் மயக்கமுற்று மரணம்

வவுனியா தாண்டிக்குளம் இராணுவ முகாம் பகுதியில் வைத்துத் திடீர் மயக்கமுற்ற பெண் ஒருவர் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் அங்கு மரணமானார்.

அண்மையில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் இறந்தவர் கல்வியங்காட்டைச் சேர்ந்த நாகப்பன் முத்துருக்கு [வயது 55) என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர் வெளிநாட்டிலிருந்து தமது பிள்ளைகள் அனுப்பிய பொருள்களைக் கொழும்பிலிருந்து எடுத்து வரும்போதே மரணமானார் என்று கூறப்படுகிறது.

இதேவேளை கடந்தமாதம் 31ஆம் திகதி தாண்டிக்குளம் பகுதியில் இறந்து கிடந்த கோவிந்தன் கந்தையா (வயது 71) என்பவரின் சடலம் வவுனியாவைத்தியசாலையில் ஒருவாரம் வைக்கப்பட்டு உறவினர் எவரும் வராததால் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டது. [த]

## லிபிய தூதரகம் இடிந்து விழுந்து ஒருவர் மரணம்

கொழும்பில் உள்ள லிபியா நாட்டின் தூதரகத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்தது.

அந்த இடிபாடுகளில் சிக்கி ஒருவர் உயிரிழந்தார். (இ-எ)

கம்பன்கோட்ட இசையரங்கில் இன்று மாலை

நாதஸ்வர மேதை என். கே. பத்மநாதன்
நாதஸ்வர கானவாரிதி வி. கே. பஞ்சமூர்த்தி
தவில் இளவல்கள் ரி. உதயசங்கர்
கே. நித்தியானந்தன்
ஆகியோர் இணைந்து வழங்கும்

நாதஸ்வர - தவில் இசை

விளம்பர ஏற்பாடு : '' மகாராணி ''

(சி/0471)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நாகம்மா செல்வரத்தினம்

பத்தமேனி - அச்சுவேலியைச் சேர்ந்த திருமதி நாகம்மா (இளைப்பாறிய ஆசிரியை) காலமாகிவிட்டார். இவர் இளைப்பாறிய பொலீஸ் சார்ஜண்ட் திரு. வே. செல்வரத்தினத்தின் அன்பு மனைவியும், திருமதி செல்வகுலராணி (அமெரிக்கா), திரு. செல்வகுலநாதன் (சுவிஸ்). செல்வகுலரஞ்சன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தாயாரும் திரு. செ. விசாகரத்தினம் (அமெரிக்கா), திருமதி ரோகினி (சுவிஸ்). சசிகலா (அமெரிக்கா) ஆகியோரின் மாமியும், திருமதி குழந்தைவேலு சின்னம்மா, திரு. ந. இராமலிங்கம், காலஞ்சென்ற திருமதி செல்லையா செல்லாச்சி, திருமதி சின்னத்தம்பி தங்கம்மா ஆகியோரின் சகோதரியும், செல்வி நிசாந், செல்வி சிந்துசா ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று 5-9-91 11 மணியளவில் பத்தமேனியில் நடைபெறும்.

தகவல் :
வே. செல்வரத்தினம்

[17695]

### திருமதி சின்னத்தம்பி சௌந்தரம்

நயினாதீவு 4 ஆம் வட்டாரம் காலஞ்சென்ற சின்னத்தம்பி அவர்களின் அன்பு மனைவி சௌந்தரம் 2-9-91 இல் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற இ. செல்லையா அவர்களின் சகோதரியும், விஜயமங்களம், கிருஷ்ணவேணி, பரமேஸ்வரி, ஸ்ரீநிவாசமூர்த்தி ஆகியோரின் அன்புத் தாயாரும், சாந்தலிங்கம், நடராசன், தனபாலசிங்கம், நிர்மலாதேவி ஆகியோரின் மாமியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 3-9-91 இல் நயினாதீவில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
ச. சாந்தலிங்கம்

(18028)

### திருமதி இராஜபரமேஸ்வரி கந்தையா

சுன்னாகம் தெற்கைச் சேர்ந்த இராஜபரமேஸ்வரி கந்தையா நேற்று [4-9-91 இல் காலமானார். அன்னார் ஆறுமுகம் கந்தையாவின் [இளைப்பாறிய வருமானவரி உத்தியோகத்தர்] மனைவியும், உதயகுமார் [ஆங்கில டிப்புளோமா, தொழில் நுட்பக் கல்லூரி), சாமினி [இராமநாதன் நுண்கலைப் பீட மாணவி] ஆகியோரின் தாயாரும், மகேஸ்வரி, சந்திரசேகரம், கைலைநாதன் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று வியாழன் [5-9-91] அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூவோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும.

தகவல்:

முருகேச பண்டிதர் வீதி,
சுன்னாகம் தெற்கு.

ஆ, கந்தையா
[கணவன்]

[18027]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org